**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் – 109/2024**

**வாதி தரப்பு சாட்சி–3 ஆசைத்தம்பி –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 10.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) நான் 5ம் வகுப்பு படித்துள்ளேன். எனது சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். வேலுச்சாமி எனது உறவினரா என்றால் ஆமாம். 1ம் வாதி எனது உறவினர் என்ற விபரத்தை எனது சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தற்போது கருப்புகோவில்தோட்டத்தில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் கருப்புகோவில்தோட்டத்தில் குடியிருக்கிறேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் குடியிருக்கும் இடத்திற்கும், 1ம் வாதி வேலுச்சாமி குடியிருக்கும் வீட்டிற்கும் இடையே ½ கிமீ தூரம் இருக்குமா என்றால் சுமார் 300 மீட்டர் தூரம் இருக்கும். மேற்படி விபரத்தை எனது வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வேலுச்சாமி குடியிருப்பதாக சொல்லும் இடத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் 664/8 ஆகும். மேற்படி இடம் 2ம் வாதி அஞ்சலை பெயரில் உள்ளது.

2) அஞ்சலைக்கு முன்பு அந்த இடம் யார் பெயரில் இருந்தது என தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் குடியிருந்து வரும் இடத்தின் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் அளவு தெரியவில்லை. 2ம் வாதி அஞ்சலைக்கு எவ்வளவு விஸ்தீரணத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அளவு தெரியவில்லை. தாவா சொத்தை பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன். வாதிகளின் வீட்டிற்கு கிழக்குபுறம் பிரதிசாதிகளின் இடம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் நிலத்தின் தெற்குபுறம் கம்பிவேலி உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ள நிலத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. இடத்தை அளந்ததாக நான் சொல்வது யார் முன்னிலையில், எப்போது அளந்தார்கள் என தெரியுமா என்றால் 2025ல் ஊர் முக்கியஸ்தர்கள்

முன்னிலையில் அளந்தார்கள். அளப்பதற்கு முன்பே பிரதிவாதிகள் வீட்டிற்கு பின்புறம் கம்பி வேலி இருந்ததா என்றால் இல்லை.

3) நான் சொல்வது தவறு என்றும், கம்பிவேலி இருந்தது என்றால் சரியல்ல. சுமார் 5 வருட காலமாக பிரதிவாதி வீட்டின் பின்புறம் கம்பிவேலி உள்ளது என்றால் இல்லை, சுமார் 3 வருட காலமாக உள்ளது. பிரதிவாதிகள் வாதிகளின் வீட்டு முன்பு உள்ள வாசலைத்தான் காலம் காலமாக தங்கள் பாதையாக பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல, அவ்வப்போது வெள்ளையடிக்க மட்டும் வருவார்கள். தோகைமலை காவல்நிலையத்தில் புகார் கொடுத்த பின்னிட்டுதான் நிலத்தை அளவீடு செய்தார்களா என்றால் இல்லை, 2020 ல் அளவீடு செய்தார்கள், அப்போது ஒத்துவராததால் பின்னிட்டு புகார் கொடுத்து அளவீடு செய்தார்கள். அளவீடு செய்ததற்கு ரசீது எதாவது கொடுத்தார்களா என்றால் அதுபற்றி தெரியவில்லை.

4) அளவீடு செய்த போது பிரதிவாதிகளின் இடம் சரியாக இருந்தது என்றும், வாதிகள்தான் பிரதிவாதிகளின் இடத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பிரச்சினை செய்தார்கள் என்றால் சரியல்ல. வேப்பமரம் பிரதிவாதிகளின் இடத்தில் அத்துக்குள்தான் இருந்தது என்றால் சரியல்ல. வேலுச்சாமி எனது நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளும் எனக்கு உறவினர்கள்தான். பிரதிவாதிகள் எனது உறவினர்கள் என்ற விபரத்தை எனது சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கிற்காக பிரதிவாதிகள் எனது உறவினர்கள் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி பொய்யான சங்கதிகளுடன் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கிற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**